# வரலாற்று சிறப்புமிக்க முப்பெரும் விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

## மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அழைப்பு!

சென்னை, செப்.19-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தி.மு.கழக பவள விழா ஆண்டு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாள் விழா கழகம் தொடங்கிய நாள் ஆகியவற்றை கொண்டாடும் முப்பெரும் விழா இன்று (19-9-2026) மாலை 5 மணிக்கு அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இதில் சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வாரீர் என முத்தமிழறிஞர் கலைஞரின் 2013ஆம் ஆண்டு முப்பெரும் விழா செய்தியை மேற்கோள்காட்டி மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவ்வறிக்கை வருமாறு:-

“குடிசைதான்! ஒரு புறத்தில் கூரிய வேல்வாள்

வரிசையாய் அமைத்திருக்கும் - வையத்தைப்

பிடிப்பதற்கும் வெம்பகை முடிப்பதற்கும்

வடித்துவைத்த படைக்கலம் போல் மின்னும்;

மிளிரும் புலியின் குகையினிலே அழகில்லை -

புதுமையல்லன்று! கிலியும் மெய் சிலிர்ப்பும்

கீழிறங்கும் தன்மையும் தலைகாட்டா

மானத்தின் உறைவிடம் - மறவன் மாளிகை!

இல்லத்து வாயிலிலே கிண்ணத்துச் சோற்றோடு

வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள் வழியனுப்பப்

பொக்கை வாய்தனைத் திறந்து பிடியன்னம் எடுத்துப் போட்டாள்

பெருநரைக் கிழவி யொருத்தி.

ஓடி வந்தான் ஒரு வீரன்

“ஒரு சேதி பாட்டி!” என்றான்.

ஆடிவந்த சிறுமிபோல்

பெருமூச்சு வாங்குகின்றாய்

ஆண் மகனா நீ தம்பி!

மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும். பின்,

பேச்சுக்குத் தொடக்கம் செய் என்றாள் அந்தக்

கிண்டலுக்குப் பேர்போன கிழட்டு தமிழச்சி!

வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி - உன்

வாடிக்கைக் கேலியை விட்டுவிடு.

‘மடிந்தான் உன் மகன் களத்தில்’ என்றான் -

மனம் ஒடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை!

“தாயம் ஆடுகையில் காய்களை

வெட்டுவதுண்டு-களமும் அது தான்.

காயம் மார்பிலா? முதுகிலா?

கழறுவாய்”” என்றாள் - முதுகிலென்றான்.

கிழவி துடித்தனள்; இதயம் வெடித்தனன்;

வாளை எடுத்தனள். முழவு ஒலித்த திக்கை நோக்கி

முடுக்கினாள் வேகம்!

“கோழைக்குப் பால் கொடுத்தேன்

குற்புற வீழ்ந்து கிடக்கும்

மோழைக்குப் பெயர் போர் வீரனாம்!

முன்பொருநாள் பாய்ந்துவந்த ஈட்டிக்குப்

பதில் சொல்ல மார்பைக் காட்டிச்

சாய்ந்து கிடந்தார் என் சாகாத கண்ணாளர்.

அவருக்குப் பிறந்தானா?

அடடா மானமெங்கே - குட்டிச்

சுவருக்கும் கீழாக வீழ்ந்து பட்டான்.

இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் - இங்கு

வீணை நம்பினிலே இசை துடிக்கும்.

அதுவும் மானம் மானமென்றே ஒலிக்கும்!

மதுவும் சுறாவும் உண்டு வாழும்

மானமற்ற வம்சமா நீ - ஏடா

மறத் தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்

மார்பு கொடுத்தேன் மகனாய் வளர்த்தேன் -

தின்று கொழுத்துத் திமிர் பாய்ந்த தோள்களெங்கே?

தினவெடுக்கவில்லையா? அந்தோ!

வேலுக்கு வழி சொல்ல வகையற்ற

கோழையே - என் வீரப்

பாலுக்கு வழி சொல்வாய்!!

என்று கதறினாள்

எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.

சென்றங்குச்செரு முனையில்

சிதறிக் கிடந்த செந்தமிழ்க் காளைகளைப்

புரட்டிப் பார்த்தாள் - அங்கு

நந்தமிழ் நாட்டை காக்க ஓடிற்று ரத்த வெள்ளம்!

பிணக்குவியலிலே பெருமூச்சு வாங்க நடந்தாள்!

மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை - மகன்

பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு - அவன்

இறந்து கிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி!

இதைக் கண்டாள் - இதயங் குளிர்ந்தாள்!

“எதைக் கண்டாலும் இனிக் கவலை இல்லை

என் மகன் வீரனாய் இறந்தான்” என்றாள்.

அறுத்தெறிய இருந்தேன்

அவன் குடித்த மார்பை - அடடா!

கருத்தெரியப் பொய் சொன்ன கயவனெங்கே?

வாளிங்கே! அவன் நாக்கெங்கே?”

என்று நாக்கை அறுப்பதற்குக் கேட்டாள் தமிழ்த் தாய்.

புறநானூற்றுத் தாய்! ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இங்கே தாய்மார்கள் வந்திருக்கிறீர்கள். அந்தத் தாயை மனதிலே நினைத்துக் கொண்டு, நம்முடைய வீட்டுப் பிள்ளைகள், வீரர்களாக விளங்க, இனமான உணர்ச்சி பெற்றவர்களாக விளங்க அவர்களை வளர்த்து ஆளாக்குங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்வதற்காகத் தான் - இறந்தாலும் புகழ் சாகாது, இறந்தாலும் பெயர் மாறாது என்ற அந்த உணர்வோடு நாம் நம்முடைய வீட்டுப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்” என்று 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முப்பெரும் விழா வாயிலாக நாட்டுக்கு நற்செய்தியை உரைத்திட்டார்.

இந்நிலையில் ஆண்டுதோறும் முப்பெரும் விழா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இனவுணர்வோடு திராவிடர் இயக்கத்தின் சிறப்பு தனை கழகக் கண்மணிகளுக்கு எடுத்துக்காட்டி புத்துணர்வூட்டப்படு கிறது. அந்த வகையில் இன்று (19-9-2026) அன்று மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நடைபெறும் முப்பெரும் விழாவில் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள், பொறுப்பாளர்கள், கழக உடன்பிறப்புகள், அனைத்து அணிகளைச் சேர்ந்த அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார்.





சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நேற்று மாமண்டூர் ஜி.எஸ்.டி சாலையில் உள்ள சி.எஸ்.கே. திருமண மண்டபத்தில் மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழக செயலாளர் சத்திய சாய் தலைமையிலும், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் முன்னிலையிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார். இதில் தி.மு.கழக வேட்பாளர் இ.பரந்தாமன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, பா.அருணாச்சலம், மாவட்டக் கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வாசுகிபாண்டியன், பொருளாளர் எஸ்.பாஸ்கரன், மாநில நிர்வாகிகள் ரத்னாலோகேஷ்வரன், டாக்டர் யாழினி பகுதி கழகச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா.துரைராஜ், கே.கண்ணன், மு.ராசா, வே.ஆனந்தம், எம்.விநாயகமூர்த்தி, காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் வே.ராஜன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், எஸ்.அரவிந்த்ரமேஷ், ஒன்றியக் கழகச் செயலாளர், கோவிலம்பாக்கம் வெங்கடேசன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.கே.ஏழுமலை, களக்காடி எல்லப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், ராமாபுரம் செல்வக்குமார், பி.ஜே.பாஸ்கர், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் பா.அருண்குமார், எம்.பார்த்திபன், மணிகண்டன் நாடிமுத்து, சைதை சாதிக், கழக த.ரமேஷ், முகேஷ்கண்ணன், பரிமேலழகன், அடையார் சி.சுரேஷ், கனிமொழிதனசேகரன், நிஷாசையத், சசிக்குமார், வானகரம் அருள், மற்றும் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், சங்கர்கணேஷ், ரவி, ஜெ.இ.பாண்டியன், தியாகராஜன், ஸ்ரீகாந்த், சந்திரேஷ். சண்முகநாதன் கலந்துகொண்டனர்.


# கண்ணீர் அஞ்சலி



வில்லிவாக்கம் மேற்கு பகுதி முன்னாள் அவைத்தலைவர்

## மா.வள்ளிமைந்தன்

எண்: 177, 3வது தெரு, நேரு நகர், அண்ணா நகர் மேற்கு, சென்னை–600 040

18.09.2026 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியவில்

## இயற்கை எய்தினார்

அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 6.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அரும்பாக்கம் மின்மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

வருத்தத்துடன் :

மனைவி : P.K.ராணி

மகன்கள் : வழக்கறிஞர்.K.கருணாகாந்தி

K.செல்வேந்திரன் வழக்கறிஞர்.K.துரை வர்மன்

மகள் : K.பூவகி தேவி


## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!




### மாவட்டச் செயலாளர்கள் தா.மோ.அன்பரசன் – க.சுந்தர் பங்கேற்பு!

# மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்! மற்றும் தேர்தல் பணிமனை திறப்பு விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமன் அவர்களை ஆதரித்து திருவள்ளூர் மத்திய மாவட்டதிற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் பணியாற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 21-09-2026 திங்கள் கிழமை அன்று மாலை 3 மணி அளவில், செங்கல்பட்டு மாவட்டம், கருங்குழியில் உள்ள முகுந்தன் மஹாலில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள். இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், இந்நாள் / முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள். பொதுக்குழு உறுப்பினர்கள். மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இன்னாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் மாமன்ற நகர் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இதனை தொடர்ந்து திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட கருங்குழி பகுதியில் தேர்தல் பணிமனை திறந்து வைக்கப்படுகிறது.

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து மதுராந்தகம் பகுதியில் உள்ள மசூதி அருகே இஸ்லாமியர்களிடம் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அருகில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக் மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ. கிருஷ்ணமூர்த்தி
## செப்டம்பர் 19 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தியாகராயர் நகர் பகுதியில் கலைஞர் மற்றும் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகிய பொதுப் பணி மன்ற தலைவராகவும் – 122வது வட்ட பகுதி பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.